Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 424/2025 PW-1**
Name : ராஜேஷ்கண்ணா
Father / Husband name : ஜெயக்குமார்
Village : திண்டிவனம்
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 04.02.2026

A2 died. A1,A3,A4 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மரக்காணம் ஈபியில் வேலை செய்கிறேன். சாட்சி ஞானபிரகாசம், இளங்கோவன், நாகராஜன் ஆகியோர்கள் என்னுடன் வேலை செய்பவர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 18.08.2018 அன்று பகல் 12.30 மணியளவில் எதிரிகள் பெருமாள், ஏழுமலை, செல்வசீமான், வீரப்பன் ஆகியோர் நான் எனது அலுவலகத்திலிருந்தபோது வந்து எனது மாமனார் தங்கமணி என்பவர் பெருமாளிடம் வாங்கியகடனுக்காக எனது மாமனாரின் இடத்தை அவருக்கு எழுதிகொடுக்கவேண்டும் என்று என்னை மிரட்டி, நான்குபேரும் கையால் அடித்து, தகாத வார்த்தையால் திட்டினார்கள். பின்னர் அங்கிருந்த என்னுடன் பணிபுரியும் ஞானபிரகாசம், இளங்கோவன் ஆகியோர்கள் வந்து மறித்துவிட்டார்கள். பின்னர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பின்னர் காவல் நிலையம் சென்று சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துளளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன்.

புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது, அதனை நான் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். பெருமாளிடமிருந்து எவ்வளவு தொகை கடன் பெறப்பட்டது என்றால் ரூ.5,00,000/- வாங்கினேன். 11.06.2013, 12.06.213 அன்று தலா ரூ.3,50,000/- மொத்தம் ரூ.7,00,000/- நான் பெருமாளிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு பதிவு செய்யாத 100 ரூபாய் பத்திரத்தில் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி கடனை திருப்பிசெலுத்துவதாக சொல்லி கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எதற்காக மேற்படி கடன் வாங்கினேன் என்றால் எனது தங்கையின் திருணத்திற்காக வாங்கினேன். பெருமாள் எப்படி உறவு என்றால் எனது மனைவியின் மூலம் உறவினர். எனது தங்கையின் திருணத்திற்காக வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டேனா என்றால் ரூ.1,50,000/- கொடுத்துள்ளேன், அதற்கு பத்திரத்தில் எழுதியுள்ளேன். மேற்படி விவரத்தை எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் நான் என்ன வேலை செய்தேன் என்றால் ஈபி அலுவலகத்தில் ஸ்டோர் ரூமில் Helper ஆக வேலை செய்தேன்.

2. எதிரிகள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் பகல் 02.30 மணிக்கு வந்தார்கள். எங்கு வந்தார்கள் என்றால் எங்கள் அலுவலகத்திற்கு உள்ளே ஸ்டோர் ரூமுக்கு வந்தார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை. எதற்காக சிகிச்சை எடுக்கவில்லை என்றால் நேராக காவல் நிலையத்திற்கு பகல் 03.00 மணிக்கு சென்றுவிட்டேன். நான் அலுவலகத்திலிருந்து வெளியில் செல்லவேண்டும் என்றால் அனுமதி வாங்கவேண்டும் என்றால் சரிதான், எனது ஸ்டோர் கீப்பர் ஆலண்டேவிடம் அனுமதி கேட்டேன். எத்தனை மணிக்கு அலுவலகத்திலிருந்து கிளம்பினேன் என்றால் சுமார் 02.50 மணிக்கு சென்றேன். என்னுடன் காவல் நிலையத்திற்கு யார் வந்தது என்றால் ஞானபிரகாசம், இளங்கோவன் வந்தார்கள். பெருமாளிடம் வாங்கிய கடனை திருப்பி கொடுக்காததற்கு, இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த கடனுக்காக எனது மாமனார்

பெருமாளிடம் 100 ரூபாய் பத்திரத்தில் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். எந்த தேதியில் எழுதிகொடுத்தார் என்றால் சம்பவத்திற்கு 10 நாட்கள் முன்பு எழுதிகொடுத்தார். 09.03.2013 அன்று எனது மாமனார் எழுதிகொடுத்தார் என்றால் தெரியாது. அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி பெயர் என்ன என்றால் கீதா. அந்த பத்திரத்தில் எனது மனைவி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எதிரிகள் அடித்திருந்தால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 424/2025 PW-2**

Name : ஞானபிரகாஷ்
Father / Husband name : ஆறுமுகம்
Village : மொளசூர்
Age : 51

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 04.02.2026

A2 died. A1,A3,A4 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது இந்திரா நகரிலுள்ள ஈபியில் ஸ்டோரில் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். சாட்சிகள் இளங்கோவன், நாகராஜன் ஆகியோர்கள் என்னுடன் வேலை செய்பவர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 18.08.2018 அன்று பகல் 12.30 மணியளவில் நான் எங்கள் அலுவலகத்திலிருந்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் ஒருநபரும் வந்து அ.சா.1 யிடம் பேசி அவரை கையால் அடித்தார்கள். நானும் இளங்கோவன், நாகராஜன் ஆகியோர்கள் அவர்களை தடுத்து வெளியில் அனுப்பிவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் அன்றையதினமே விசாரித்தார்கள், நேரம் நினைவில்லை. சம்பவத்தின்போது நான் எங்கிருந்தேன் என்றால் அலுவலகத்தின் உள்ளே சுமார் 10 மீ தூரத்தில் இருந்தேன். யார் யாரை அடித்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. புகார் கொடுக்கும்போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு அ.சா.1 சென்றார் என்றால் 1 மணியளவில் சென்றுவிட்டார். மீண்டும் எத்தனை மணிக்கு அ.சா1 அலுவலகத்திற்கு வந்தார் என்றால் தெரியாது. அ.சா.1 ம் நானும் Helper ஆக உள்ளோம். சம்பவம் எதற்காக நடந்தது என்று அ.சா. 1 என்னிடம் சொன்னரா என்றால் இல்லை. அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் தெரியாது.

சம்பவம் எதுவும் நடக்கவில்லை, எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ம் நானும் Helper ஆக பணிசெய்வதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 424/2025 PW-3**

Name : இளங்கோவன்
Father / Husband name : காங்கையன்
Village : தென்னமாதேவி
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 04.02.2026

A2 died. A1,A3,A4 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது இந்திரா நகரிலுள்ள ஈபியில் வேலை செய்கிறேன். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி நாகராஜன் என்பவரை என்னுடன் வேலை செய்பவர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 18.08.2018 அன்று பகல் 12.30 மணியளவில் நான் எங்கள் அலுவலகத்திலிருந்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் ஒருநபரும் வந்து அ.சா.1 யிடம் பேசி அவரை கையாலும், காலாலும் அடிக்கும்போது நான் பார்த்தேன். நானும் ஞானபிரகாசமும் வருவதை பார்த்து அவர்கள் சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவதன்று மாலை 4 மணியளவில் விசாரித்தார்கள். சத்தம் கேட்டு தான் நான் வந்தேன் என்றால் சரிதான். அ.சா.1 காவல் நிலையம் சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு அ.சா.1 சென்றார் என்றால் 3.30 மணி இருக்கும். மீண்டும் எத்தனை மணிக்கு அ.சா1 அலுவலகத்திற்கு வந்தார் என்றால் உடனே வந்தார், மணி நினைவில்லை. சம்பவத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு நபர் அ.சா.1 அடித்தார்கள், நான் பார்த்தேன். அப்போது நான் ஸ்டோர் ரூம்

பின்னால் இருந்தேன் என்றால் சரிதான். அ.சா.1 புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும், வந்த பிறகு அ.சா.1 சொன்னார். அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ம் நானும் Helper ஆக பணிசெய்வதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.